★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 16 ஷவ்வா: 28 இதழ்: 233
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-10-78

யாழ. நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
ஃ பாஸ்போட் ஃ சான்றிதழ்
ஃ கட்டிடப்பிளான் ஃ புஸ்தகம்
எதுவானாலும்
சாதாரண சைஸ் ரூ. 1/-
இருபக்கமும் ரூ. 1-75
பெரியசைஸ் ரூ. 1-50, 2/- 3-50
சுப்பர் கனன்
கொப்பி சேவிஸ்
13, நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## பயங்கர பஸ் விபத்து 88 பேர் பலி!

கல்கத்தா. அக். 1

மேற்கு வங்காளத்தில் இன்று நிகழ்ந்த பஸ் விபத்தொன்றில் எண்பத்தெட்டுப் பேர் பலியானார்கள்!

கல்கத்தாவிலிருந்து சுமார் நூறுகிலோ மீட்டர் தொலைவில் இக்கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

வெள்ளம் பெருக்கெடுத்தோடிய கால்வாயில் பஸ் விழுந்ததில், இந்த விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

காயமடைந்த 20 பேரில் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

# சன்சோனி கமிஷன் இன்று திருகோணமலையில் கூடுகிறது

(திருகோணமலை)

சன்சோனி விசாரணைக் கமிஷன், இன்று திருகோணமலையில் முதற் தடவையாகக் கூடுகிறது. இன்று ஆரம்பமாகும் விசாரணைகள், இம்மாதம்வரை நடைபெறும் என்று அறியப்படுகிறது.

1977 ஆகஸ்ட் கலவரம் சம்பந்தமான சன்சோனி விசாரணைக் கமிஷன் இன்று முதற் தடவையாக இங்கு கூடும் பொழுது, முதலில் சட்டத்தரணிகள் தங்களது நிலைமைகளை எடுதது விளக்குவார்கள்.

### 5வது தடவையாக கூடுகிறது

ஆரம்பத்தில் யாழ். நகரிலும் பின்னர், அனுராதபுரத்திலும், பின்னர்கண்டி கொழும்பிலும் இப்பொழுது ஐந்தாவது தடவையாக திருகோணமலையிலும் சன்சோனி விசாரணைக் கமிஷன் கூடுகிறது.

### மீண்டும் கொழும்பில்

இம்மாதம் முடியும்வரை தனது விசாரணைகளை திருகோணமலையில் மேற்கொள்ளும் சன்சோனி கமிஷன் நவம்பர் முற்பகுதியில் மீண்டும் கொழும்பு சென்று தனது விசாரணைகளைத் தொடரும்.

### தொண்டமான், அமிர் சாட்சியம்

கொழும்பில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பமானதும், அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் சாட்சியமளிப்பார்கள்.

சன்சோனி கமிஷனின் விசாரணைகள் அநேகமாக 1979ஜனவரியில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. [ம]

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு 5-ந் திகதி கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டம் இம்மாதம் 5ம் திகதி கூடவிருக்கிறது.

நேற்றுக் கூடஇருந்த இக் கூட்டம், கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் இல்லத்தில் 5ம் திகதி நடைபெறவிருக்கிறது. (ஈ)

## இன்று துப்பாக்கி கொள்ளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளை வழக்கு இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக 41 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (கு-அ)

## லண்டன் தமிழாராய்ச்சி மகாநாடு

# கீழைத்தேய மொழிக்கல்வி நிலையத்தில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாடு, திட்டமிட்டபடி, அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில், லண்டனில் நடைபெறும்.

லண்டன் கவர் வீதியிலுள்ள கீழைத்தேய மொழிக் கல்வி நிலையத்தில் ஜூலைமாத பிற்பகுதியில், 5-வது தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறும்.

நேற்றுக் காலை நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் நிர்வாகக்குழுக் கூட்டத்துக்கு, பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமை வகித்தார். வண. தனிநாயகம் அடிகள், திரு. ஜேம்ஸ் ரி. இரத்தினம், கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா, டாக்டர் இந்திரபாலா, திரு. க. சச்சிதானந்தன், திருமதி பாலகிருஷ்ணன், திரு. ஈழவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றைய குழுக் கூட்டத்தில் உத்தேச ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாடு பற்றி விரிவாக ஆராயப்பட்டு சில முக்கிய முடிவுகள் மேற் கொளளப்பட்டன'

வண. தனிநாயகம் அடிகள் நேற்றைய குழுக் கூட்டத்தில் கருதது வெளியிடுகையில், ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாடு திட்டமிட்டபடி லண்டனில் நடைபெறும். என்பதை ஊர்ஜிதப்படுத்தி, அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையை மேலும் பலப்படுத்த, பலனுள்ள நடவடிக்கைகளை மேற் கொளள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நேற்றைய குழுக்கூட்டத்தில் வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற சில அழைப்புக்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்வரும் தமிழாராய்ச்சி மகாநாட்டை தமது நாட்டில் நடத்துமாறு செனகல் நாட்டுப் பிரதமர் அன்புக் கோரிக்கை விடுத்திருந்ததை நிர்வாகக் குழுவினர் மிகவும் கவனமாகப் பரிசீலனைசெய்து, செனகல் பிரதமரின் அழைப்க்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

லண்டனில் நடைபெறும் ஐந்தாவது தமிழாராய்ச்சி

(9ம் பக்கம் பார்க்க)

### கிரிக்கெட்

## இந்தியாவின் முதல் வெற்றி

ராவல்பிண்டி, அக். 1

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

'40 ஓவர்' போட்டியில், இந்தியா ஏழு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 170 ஓட்டங்களும், பாகிஸ்தான் 8 விக்கட்டுகள் நஷ்டத்துச்கு 166 ஓட்டங்களையும் எடுத்தது.

## ஜனாதிபதி அறிவித்த குடியேற்றத் திட்டம்:

# அறிக்கை சமர்ப்பிக்க 7பேர் கமிட்டி நியமனம்

## தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு 15-ல் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சிங்களவர்களையும், தெற்கில் தமிழர்களையும் குடியேற்றுவது என்ற ஜனாதிபதி ஜே. ஆர், ஜயவர்த்தனாவின் திட்டம் பற்றியும், மதுறுஓயாக் குடியேற்றத்திட்டம் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 7 பேர் கொண்ட குழுவொன்றை தமிழ்க் காங்கிரஸ் தெரிவுசெய்துள்ளது.

புதிய அரசியல் சாசனத்தைப் படித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் 11 பேர் கொண்டகுழுவொன்றுதெரிவு செய்யப்பட்டது.

தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு நேற்றுக் காலை, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், முள்ளியவளையைச் சேர்ந்த திரு. என். நடனசபாபதி, வவனியாவைச் சேர்ந்த திரு. எம். பொன்னையா ஆகியோருட்பட 30 பேர் சமுகமளித்திருந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் புனித பாப்பரசரின் மறைவு குறித்து 2 நிமிட மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்றைய அரசியல் நிலை பற்றி ஆராயப்பட்டு, அது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க இரு குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

காங்கிரஸ் தலைவர் திரு. தா. சங்கரப்பிள்ளை' வடக்கில் சிங்களவர்களையும், தெற்கில் தமிழர்களையும் குடியேற்றும் திட்டத்தைக் கண்டித்து ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை அங்கிகரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதுடன், அத்தீர்மானத்தையும் ஜனாதிபதிக்கு அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

புதிய அரசியலமைப்பு, குடியேற்றம் பற்றிக் கொழும்புக் கிளை அனுப்பிய விஷயங்கள் அந்தந்தக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது

நவம்பர் 8ந் தேதி, அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினம் பற்றி ஜி ஜி ஞாபகார்த்தக்குழுஎடுத்துள்ள முடிவுகள் பற்றியும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது அடுத்த செயற்குழுக் கூட்டத்தை இம்மாதம் 15ந்தேதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது. (க)

## வேல் ஆனந்தனை கட்டித் தழுவிய மகாதந்தில

]யாழ்ப்பணம்[

வேல் ஆனந்தனின் முகபாவனைகளைக் கண்டு, மேலதிகக் கல்வி மா அதிபதி திரு. டபிள்யு. டி. சி. மகாதந்தில அவரைக் கட்டித் தழுவி, முத்தம் கொடுத்தார்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் தொண்டைமானாறு வெளிக்களப் பயிற்சி நிலையத் திறப்புவிழாவில் இடம்பெற்றது.

வேல் ஆனந்தனின் நடனத்தை மிக அமைதியாக ரசித்துக் கொண்டிருந்த திரு. மகாதந்தில, திடீரென நிகழ்ச்சி முடியும் தறுவாயில் எழுந்து மேடையில் ஏறி, வேல் ஆனந்தனை கட்டித் தழுவினார். அவருடன் அபிநயஞ்செய்த மற்றைய மாணவியையும் பாராட்டினார். (கெ)

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து ஐந்து மைல் சுற்றுடலுக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒப்பந்த அடிப்படையில் பிரபல சட்டத்தரணிக்கு வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்க்வும். விளம்பர இல: 0467, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்* 0467

### விற்பனைக்கு

சாவகச்சேரி சங்கானை பஸ் ஓடும் றேட்டில் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் (D.P.L) போட்ட நல்ல தண்ணீர் கிணற்றுடன் குடியிருப்புக்காகிய சிறந்த காணி தொடர்பு கொள்ளவும்: M. பாலசிங்கம், "நல்லார் பாம்", கெருடாவில், சாவகச்சேரி. 0453

உடுவில் சித்தாவத்தை 24 பரப்பு தென்னங் காணி. தொடர்பு கொள்ளும் விலாசம்: திரு. செல்வத்துரை தருமரத்தினம், மருதனுமடம். 0417


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற புன்னாலைக் கட்டுவனைச்சேர்ந்த வல்லிபுரம் கந்தப்பிள்ளை என்பவரின் மரண சாதன விடயத்தில் மரணமெய்தியவர்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. த. 3395

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலர்காதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1978 புரட்டாதி 28இல்
0452


"நம்முடைய ஆசைகளைக் குறைத்துக் கொண்டு ஏழைகளுக்குஓரளவுமிஞ்சும்படிசெய்வது நமதுகடமை"
—காந்திஜி—



10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளை அனுப்பி காந்தியின் "படிப்பினை" என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**"பிறந்தநாள் நினைவுக்கு மரமொன்று நடுங்கள்"**
—காந்திஜி

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
0470



# நவராத்திரி பூஜைக்கு

தேவையான

- விளைவு சூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினுல் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்துநற்பெயர் பெற்றவர்கள்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். றேட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541

"பாலேந்திராபில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்:35825

Residence: 7068


யாழ். கலாசார மன்றக் கருத்தரங்கு:

# "தமிழினம் விடுதலை பெற்று வாழ தனித் தமிழ்நாடு அவசியம்" -ஆலாலசுந்தரம்

## "தலைவர்களுடன் மக்களும் போராடினாலே உரிமைபெறலாம்"
— சுயாட்சி ஸ்ரீகாந்தா

(அரியாலை)

"தமிழினம் விடுதலைபெற்ற இனமாக இந்தநாட்டில் வாழ வேண்டுமானால் அவர்களுக்குப் பூரண சுதந்திர அமைப்புக் கொண்ட தனித்தமிழ்நாடுஅவசியமாகும்."

யாழ்ப்பாணக் கலாச்சார மன்றத்தின் ஆதரவில் காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கில் நடந்த கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ், வளாக விரிவுரையாளர் திரு. எஸ். நித்தியானந்தன் தலைமையில் நடந்த கருந்தரங்கில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் கூறியதாவது:

"1947ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்த நாட்டில் வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் யாவும் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. காலத்துக்குக் காலம் ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட குடியேற்றத் திட்டங்களால் தமிழ்மக்களின் பிரதேசமும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால் தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்ற அங்கத்தவர் பலமும் குறைக்கப்பட்டது. 1958-ம் ஆண்டிலும், 1977ம் ஆண்டிலும் இந்நாட்டில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்கள் தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், உயிரையும் பலிகொண்டன. ஆட்சிக்குவரும் அரசாங்கங்களோடு அற்ப சலுகைகளுக்காக முஸ்லிம் தலைவர்கள் இணைந்து செயல்பட்டாலும், இந்நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகளும் படிப்படியாக பறிக்கப்பட்டுவருகின்றன.

### தென்னிலங்கை வகுப்புவாதம் வடக்கில் எதிரொலி

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு. செந்திவேல் பேசுகையில் கூறியதாவது:

"இந்தநாட்டில் காலத்துக்குக்காலம் ஆட்சிசெய்வோர் மாறினாலும் அவர்கள் எல்லோரும் முதலாளித்துவ பிரபுக்கள் வம்சத்தைச சேர்ந்தவர்களாவர். தமிழ்மக்களிடையே கடந்த முப்பதாண்டுகளாக மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கிய அரசியல் கட்சிகள் கடைப்பிடித்த நாட்டுக்குதவாத வகுப்புவாதக் கொள்கைகளினால்தான் தமிழ்பேசும் மக்கள் இந்த நிலைக்குத தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ்மக்கள் தம்மைத்தாமே ஆளும் நிலைமையேற்பட்டாலும் தமிழர் பிரச்னைகளுக்குத தீர்வு காணமுடியாது. தென்னிலங்கையிலிருக்கும் கட்சிகள் தேர்தலில் வெற்றிபெறக் காலத்துக்குக் காலம் எழுப்பிவரும் வகுப்புவாதக் கூக்குரல்தான் இந்நாட்டில் பெரிய வகுப்புக் கலவரங்களை ஏற்படுத்துகிறது. தமிழ்பேசும்மக்கள் இனிமேலாவது தமது எதிர்காலத்தை எண்ணி இந்தநாட்டில் வாழும் தொளிலாளர் வர்க்கத்துடன் ஒன்றுபட்டுழைத்து சிறந்த தொழிலாளர் வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவதின்மூலம் தமிழ்மக்களின் சகல பிரச்னைகளுக்கும் சரியான தீர்வுகாண முன்வரவேண்டும்.

### விடுதலைப் போராட்டத்திற்கு தொண்டமான் இடையூறு

சுயாட்சிக் கழகத்தின் சார்பில் சட்டத்தரணி திரு. சிறீகாந்தா பேசுகையில் கூறியதாவது!- "சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்மூலம் சுமார் ஐந்தேகால் லட்சம் மக்கள் நாட்டைவிட்டுப்போகிறார்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய திரு. தொண்டமான் மந்திரிப் பதவியைப் பெற்றதின் மூலம் தமிழ் மக்களின் உரிமை - விடுதலைப் போராட்டத்திற்கு இடையூறு விளைவித்துவிட்டார். இந்த நாட்டில் இயங்கும் எந்த இயக்கமாவது இதுவரை இந்த நாட்டில் வாழும் மலையக மக்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டுமென்று போராட முன்வரவில்லை. தலைவர்கள் மட்டும் போராடுவதின்மூலம் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுவிடமுடியாது. மக்களும் ஒன்றுபட்டுத் தம் முரிமைக்காக போராட முன்வர வேண்டும். தமிழ் மக்கள் பூரண சுதப்திரமுள்ள இனமாகஇந்நாட்டில்வாழவேண்டுமானல் ஒன்றுபட்ட இயக்கம் ஒன்றில் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். தமிழ் மக்களிடையே இன்று இருக்கும் சகல சாதி-மத வேறுபாடுகள் யாவும் முற்றாக அழியவேண்டும்.

## "ஐக்கிய இலங்கையையே முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர்

இஸ்லாமிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த ஜனுப் எம். ராவுப் பேசுகையில் தமிழ்ப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்கள் படிப்பிக்க முடியாவிட்டால் முஸ்லிம்கள் எப்படித் தமிழ்த் தலைமையை ஏற்றுக்கொள்ள முடியும். சிங்களமக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் முஸ்லிம்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள். அதே நேரத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் தமிழ்ப் பகுதிகளில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி தெரிவுசெய்வப்படக்கூடிய வாய்ப்புக்கள இதுவரை ஏற்படவில்லை. முஸ்லிம்கள் ஐக்கிப இலங்கையையே விரும்புகிறார்கள் என்று கூறினார்.

மனித உரிமை விடுதலை முன்னணியைச் சோந்த திரு. செல்வரத்தினம் பேசுகையில் "மலையகத்திலும் புத்தளத்திலும் நடைபெறும் சம்பவங்களுக்கு குரல்கொடுக்கும் தமிழ்த் தலைவர்கள் வடபகுதியில் நடைபெறும் சாதிக்கலவரங்கள் சம்பந்தமாக மௌனம் சாதிப்பது ஏன்? திரு. இராசலிங்கம் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டமையால் தீண்டாமை வடபகுதியில் மறைந்துவிடவில்லை. சாதிப்பிரச்னைக்குப் பூரண தீர்வு ஏற்படும் வரை தமிழ் ஈழக்கோரிக்கையை சிறுபான்மைத் தமிழ் மக்கள் பூரணமாக எதிர்க்க வேண்டும் என்றார்.

மலையகமக்கள் சார்பாக திரு. சி. கிருஷ்ணசாமி உட்பட இன்னும் பலரும் இக் கருத்தரங்கில் பேசினார்கள்.

(அ)

## கால் இறுதிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

இடைக்காடு சனசமூக நிலையஆதரவில் நடைபெறும் மின்னொளியில் கரபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று ஆறு வீரர் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் வி. க. சிறுப்பிட்டி உதயதாரகை வி.க 'ஏ' நீர்வேலி ஐக்கிய வி.க. 'ஏ' நீர்வேலி ஐக்கிய வி.க. 'பி' சிறுப்பிட்டி அண்ணா ச. ச. நி, ஆவரங்கால் சரஸ்வதி ச. ச. நி ஆகியன கலந்து கொள்கின்றன.

நாலு வீரர் ஆட்டத்தில் உடுப்பிட்டி இமையாணன் வி. க. 'பி' வல்வை தீருவில் வி.க. 'ஏ' இடைக்காடு சில்வர் ஸ்ரார் வி. க. 'ஏ' ஆவாரங்கால் சரஸ்வதி ச. ச. நி. 'ஏ' அச்சுவேலி ஐக்கிய வி. க. ஆவரங்கால் சரஸ்வதி வி க. 'பி' ஆகியன கலந்து கொள்கின்றன.

இவை அனைத்தும் கால் இறுதிப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

நேற்று முன்தினமுடிவுகள் ஆறுவீரர் ஆட்டத்தில் பன்னாலை சிவசக்தி வி.க. 'பி' கதிரிப்பாய் முரசொலி வி.க. 'பி' ஆகியனவும், நாலு வீரர் ஆட்டத்தில் சிறுப்பிட்டி உதயதாரகை வி.க. 'ஏ' இமையாணன் கலைமகள் வி.க. புத்தூர் தந்தைசெல்வா வி.க. 'ஏ' அச்சுவேலி ஐக்கிய வி.க. ஆகியனவும் வெற்றி பெற்றுள்ளன. [கூ-அ]

## நவராத்திரி பூஜையுடன் கொண்டாடமுடிவு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அலங்கார உற்சவத்துடன் நடைபெற்று வந்த ஸ்ரீமகாமேருயந்திர பூஜையை நவராத்திரிபூஜையுடன் இன்று முதல் 11-ம் திகதி வரை சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் தலைமையில் கொண்டாடுவதென நாரந்தனை சைவமகாசபை தீர்மானித்துள்ளது. [உ]

# சத்தியம் அஹிம்சை அடிப்படையில் முழுமைப்புரட்சி முகிழ்க்கட்டும்

[இன்று கொண்டாடப்படும் காந்தி ஜெயந்தியையொட்டி; சத்தியம்—அஹிம்சை அடிப்படையில் முழுமைப் புரட்சி என்ற கருத்தை வலியுறுத்தி கிராமராஜ்ய இயக்க அமைப்பாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை வெளியிட்டுள்ளஅறிக்கை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஆ.ர்.]

இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டுமாயின், காந்திய—சர்வோதய தத்துவ வழி நின்று செயற்படவேண்டுமென்று கூறிவரும் விநோபா அடிகளும் ஸ்ரீஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களும் கிராம சுயராஜ்யத்தை நிறுவுவதற்கு முழுமைப்புரட்சியைத் தோற்றுவிக்கவேண்டுமென வற்புறுத்தியுள்ளனர்.

இன்று இலங்கை மக்களைச் சிறப்பாக தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணவேண்டுமாயின் முழுமைப் புரட்சியை ஏற்படுத்தி கிராம சுயராஜ்யத்தை நிறுவவேண்டுமென அகில இலங்கைக் காந்திசேவா சங்கம் நம்புகிறது.

இப்பணியை எவ்வாறு தொடங்குவதென நீண்ட நாட்களாக ஆலோசிக்கப்பட்டது இதன்பயனாக ஒரு தேர்தல் தொகுதியில் ஒரு கிராமத்தைத் தெரிவுசெய்து இக் கிராமங்களில் கிராம சுயராஜ்ய பணியை மேற்கொள்வதெனத் தீர்மானித்தோம்.

பேராசிரியர் கு. நேசையா, அகில இலங்கைக் காந்திசேவா சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, பட்டயம் பெற்ற கட்டடக் கலைஞர் திரு. ச. அ. டேவிட் ஆகியோர் பல கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் உரையாடி கிராம சுயராஜ்யத் திட்டத்தை விளக்கியபோது போதிய ஆதரவு காணப்பட்டது.

ஒரு கிராமத்திலிருந்து ஐந்து ஊழியர்கள் வீதம் அழைத்து இன்றுமுதல் கிராம சுயராஜ்யத்திட்டம் பற்றிய பயிற்சியை ஆறு நாட்களுக்குத் தொடர்ந்தளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது,

இப்பயிற்சி முகாம் கிளிநொச்சி, உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறும். இது ஆரம்பப்பயிற்சியேயாகும். இதன்பின் ஊழியர் கிராமங்களுக்குச்சென்றுதமது வேலையைத் தொடங்குவார்கள். ஒரு சில மாதங்கள் பணிபுரிந்தபின் மீண்டும் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

உணவு, உடை, உறைவிடம் ஆகியவைகளில் சுயதேவைப் பூர்த்தியை ஏற்படுத்துவதுமல்லாமல், கிராமத்தில் காணப்படும் இயற்கை வளங்களைச் செயற்படுத்தவும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இன்று கிராமங்களில் ஒன்றல்ல, இரண்டல்ல, பல நூற்றுக்கணக்கான பிரச்னைகள் காணப்படுகின்றன. இவை புற்றுநோய் போல் கிராமங்களை நாளுக்கு நாள் அழித்து வருகின்றன. இதற்குத் தகுந்த சிகிச்சை செய்யாவிடின் கிராமங்கள் அழிந்துபோகும். அப்போது எங்களுக்கு வாழ்வேது?

சத்தியம்—அஹிம்சை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே முழுமைப்புரட்சியைத் தோற்றுவிப்பதற்கான வழிவகைகள் பயிற்சியின்போது ஆராயப்படும். சமுதாயப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சத்தியாக்கிரகம்-ஒத்துழையாமை என்பவைகளும் எந்த அளவில் உதவுமென்பது பற்றியும் கவனத்திற்கு எடுக்கப்படும்.

இன்று நாட்டில் கிராமமுன்னேற்றத்திற்காகப் பல சங்கங்களும் திட்டங்களும் இருப்பதாக அறிகிறோம். காந்தி சேவா சங்கம் மேற்கொண்டிருக்கும் பணி இவைகளிலிருந்து முற்றும் வேறுபட்டதாக இருக்கும். கிராமத்தையும் அதன்மூலம் சமுதாயத்தையும் மாற்றி அமைப்பதே எங்கள் பணியின் நோக்கமாகும்.

இப்பெரும் பணியை இந்நாட்டு மக்களின் உதவியுடனேயே நிறைவேற்ற முடியுமென்பது எங்கள் நம்பிக்கை. ஆகவே இப்பணிக்கு எல்லோரது ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

## காந்தி ஜெயந்தியும் சிறுவர் தினமும்

(யாழ்ப்பாணம்)

காந்தி ஜெயந்தி விழாவும் சர்வதேச சிறுவர்தின விழாவும் இன்று காலை உருத்திரபுரம் காந்திநிலையத்தில் ஆரம்பமாகி இம்மாதம் 7ம் திகதி வரை ஆறுநாட்கள் நடைபெறுகின்றன.

முதல்நாள் நிகழ்ச்சியான இன்று ''கிராம சுயராஜ்யமும், முழுமைப் புரட்சியும்'' என்னும் விடயம்பற்றி கிராம சுயராஜ்ய இயக்க அமைப்பாளரும் காந்திய சேவா தொண்டருமான திரு. சோ. க. தம்பிப்பிள்ளை உரையாற்றுவார்.

இவ்விழாவினை அடுத்து கிராம சுயராஜ்ய இயக்க ஊழியர் பயிற்சிமுகாம் 5 தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெற உள்ளது. இவ்வைபவ ரீதியான தொடக்கவிழா 3ந்திகதி செவ்வாய்க்கிழமை காலையில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜகநாதனால் ஆரம்பிக்கப்படும்.

பயிற்சிமுகாமில் தினமும் யோகாசனப் பயிற்சியும் பயிற்சிக்கான விரிவுரைகளும் நடைபெறும். இப்பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு தங்குமிடவசதியும் உணவும் இலவசமாக வழங்குவதுடன் கைச்செலவுக்கான பணமும் அளிக்கப்படுமென பயிற்சிமுகாம் அமைப்பாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஊ)

# வடக்கில் சுயஉதவி மூலம் இவ்வருடம் 1000 வீடுகள்!

## ரூ. 150 லட்சம் ஒதுக்கீடு:

### மாநாட்டில் ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு இலாகா நடப்பு வருடத்தில் 1000 வீடுகளை சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்க உள்ளது. அத்துடன் வீடமைப்புக் கடனுக இவ்வருடம் வடபகுதிக்கு 150 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை இப்பணத்தில் 80 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மொத்தம் 40 வீடமைப்புத் திட்டங்கள் இவ்வருடத்தில் பூர்த்தியாக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் நாவற்குழியில் 250 வீடுகள் வீடமைப்பு இலாகாவினல் கட்டப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வீடமைப்பு இலாகா அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு இலாகா உதவி ஆணையாளர் திரு. எம். இராசரத்தினம் தெரிவித்தார்.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் ஆகியோர் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி உட்பட பல அரசாங்க அதிகாரிகளும் இம் மாநாட்டில் பங்குபற்றினர். மாநாட்டில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

''தேசிய வீடமைப்பு இலாகா வீடொன்றுக்கு 8000 ரூபா செலவழிக்கத் தயாராக உள்ளது.

முன்னர் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் இருந்த வீடமைப்புத் திட்டங்களும் தேசிய வீடமைப்பு இலாகாவின்கீழ்வரும்.

### தொகுதிக்கு 3 லட்ச ரூபா வட்டியில்லாக் கடன்

வீடுகளைச் சீரமைப்பதற்கு தொகுதிக்கு நூறு வீடுகளுக்கு வீடொன்றுக்கு 3000 ரூபா வட்டியில்லாக் கடன் வீடமைப்பு உதவி ஆணையாளரின் சிபார்சின்படி வங்கி மூலம் வழங்கப்படும். இக்கடன்களுக்குத் தொகுதி எம். பிக்களின் சிபார்சுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

வடபகுதி எம். பிக்களின் சிபார்சின்பேரில் தொகுதிகள் தோறும் வீடமைப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட இருக்கின்றங்கள்.

### யாழ். தொகுதியில் வீடமைப்புத் திட்டங்கள்

யாழ்ப்பாணத் தொகுதியில் பொம்மைவெளித் திட்டத்தில் மிக விரைவில் 32 வீடுகள் அமைக்கப்பட உள்ளன. பாஷையூரில் 100 வீடுகளும், குருநகரில் 60 வீடுகளும் கட்டப்படும். மற்றும் சிவன் பண்ணை, தேவரிக்குளம் ஆகிய இடங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படுவதற்கான சிபார்சுகள் தொகுதி எம். பியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட்டு. தொகுதியில் 170 வீடுகள்

வட்டுக்கோட்டைத்தொகுதி தோப்புக்காட்டில் (சீநோர் திட்டம் 45 வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. 2 மாதங்களுள் இவ்வீடமைப்புத் திட்டம் பூர்த்தியாகும். இன்னும் துணைவியில் 25 வீடுகளும் பூலோகன்காட்டில் 50 வீடுகளும், மடத்து வளவில் 50 வீடுகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன.

### பரு. தொகுதியில் 325 வீடுகள்

பருத்தித்துறைத் தொகுதியில் துன்னாலை வடக்கில் 25 வீடுகளும், மணற்காடு செம்பியன்பற்றில் 40 வீடுகளும், மருதங்கேணி வடக்கில் 80 வீடுகளும், குடத்தனையில் 40 வீடுகளும், நாகர்கோவிலில் 40 வீடுகளும், கற்கோவளத்தில் 100 வீடுகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மானிப்பாய்த் தொகுதியில் நகரசபை ஒழுங்கையில் 33 வீடுகள் அமைக்கப்படும்.

காங்கேசன்துறைத் தொகுதியில் மயிலிட்டி வடக்கில் 60 வீடுகளும், பலாலி வடக்கில் 30 வீடுகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கோப்பாய்த் தொகுதியில் சிறுப்பிட்டிப்பகுதியில் உள்ள சுவீகரிக்கப்பட்ட காணிப் பகுதியொன்று வீடமைப்புக்காக ஆளுக்கு 2 பரப்பு வீதம் வழங்கப்படும்.

### நல்லூரில் 341 வீடுகள்

நல்லூர்த் தொகுதியில் திருநெல்வேலி வடக்கு கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் 167 வீடுகள் கட்டப்பட உள்ளன.

பூம்புகார்பகுதியில் 2 பரப்பு வீதம் 174 பேருக்கு வீடமைப்பு நிலம் வழங்கப்படும்.

### யாழ். நகர ஜனத்தொகையைப் பரவலாக்க......

சாவகச்சேரித் தொகுதி நாவற்குழியில் சுவீகரிக்கப்பட்டுள்ள 97 ஏக்கர் நிலத்தில் 250 வீடுகள் கட்டப்பட உள்ளன. இத்திட்டம் யாழ்ப்பாண நகர ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தி பரவலாக்கும் நோக்கத்துக்காக அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் நேரடியாக வீடமைப்பு இலாகாவினல் கட்டப்பட்டு விற்பனைக்கு விடப்படும். மத்திய தரவகுப்பினருக்காகக் கட்டப்படும் இவ்வீடமைப்புத் திட்டத்தில் நாவற்குழி வீடமைப்புச் சங்கத்தினருக்கு விசேஷ முன்னிரிமை அளிக்கப்படும்.

### மிருசுவில் படித்த பெண்கள் திட்டத்தில்

மிருசுவில் படித்த பெண்கள் பண்ணையில் 77 வீடுகள் சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட உள்ளன.

மணற்காடு நாவற்குளி தெற்கில் கால் ஏக்கர் வீதம் 43 காணித்துண்டுகள் வழங்கப்படும். கைதடி தெற்கு, மட்டுவில் வடக்கு வண்ணாத்திப்

(7ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை சம்பளப் பணம் கொள்ளை:

# புதிய சட்டத்தின்கீழ் கொண்டுவர இருப்பதாக பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சம்பளப் பணம் கொள்ளை தொடர்பான குற்றங்களைப் புதிய 16ம் சட்டத்தின்கீழ் கொண்டுவரவிருப்பதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோது இச்சம்பவம் பற்றிய தகவல்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு எனச் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இவ்வழக்குப் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப் பணத்தைக் கொள்ளையடித்தது தொடர்பாக 10 இளைஞர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த தவணையின்போது நீதிபதி கட்டளையிட்டதன் பிரகாரம், பொலிஸ் தரப்பில் என்னென்ன பத்திரங்கள், அறிக்கைகள் தாக்கல்செய்திருக்கிறார்கள் என ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) கேட்டார்.

'பி' அறிக்கையுடன் வேறு என்ன பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என அவர் மேலும் கேட்டார்.

வாக்குமூலம் மட்டுமே தாக்கல் செய்திருப்பதாக, 'பி' அறிக்கை தாக்கல்செய்யவில்லையென்றும் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நிமால் சில்வா கூறினர்.

ஜி. ஜி. பொன்னம்பலம்: அப்படியானல் சந்தேகநபர்களை உடனடியாகப்பிணையில் விடவேண்டும்.

ஏ. எஸ். பி. சில்வா: பிணையில் விடுவதை நான் ஆட்சேபிக்கின்றேன். எமக்குச் சில ஆதாரம்கிடைத்துள்ளது. புதிய 16ம் சட்டத்தின் கீழ் இதனைக்கொண்டுவர இருக்கின்றோம்.

ஜி. ஜி. பொன்னம்பலம்: என்ன ஆதாரமிருக்கிறது? கடந்த தவணைக்கும் இந்தத் தவணைக்கும் இடையிலுள்ள விசாரணை முன்னனேற்றங்களை நீதிபதி பார்த்துஅதனைத் தீர்மானிக்க வேண்டும். உண்மையான ஆதாரம் உண்டா? அல்லது பொலிசார் வேண்டுமென்று பிணைக்கு முட்டுக்கட்டைபோட இப்படிச்சொல்கிருர்களா என்பது தெரிய வேண்டும்.

நீதிபதி: 16ம் சட்டத்திற்கு இது வருவதாக இருந்தால் பொலிசார் சரிவரத்தாக்கல் செய்யவேண்டும்.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா: 15ம் சட்டத்திலும், 16ம் சட்டத்திலும் ஒரே வார்த்தைகள்தான் ஒரு பகுதியில் பாவிக்கப்பட்டுள்ளன. 15ம் சட்டத்தின் 2ம்பிரிவிலும் 16ம் சட்டத்தின் 18ம் பிரிவிலும் ஒரேவார்த்தைகள்பாவிக்கப்பட்டிருக்கின்றன. 15ம் சட்டத்திலும் பார்க்க 16ம் சட்டம் மேலடங்கியிருப்பதாக உள்ளது. ஆதலால் 15ம் சட்டப் பிரகாரம் பிணையில் விட முடியுமானல் 16ம் சட்டத்தின் மூலமும் பிணையில்விட முடியும்''.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்[, ஆர். ஸ்ரீசிவாய, ஆர். பரமகுரு, எம். வேலும்மயிலும், சிவா பாலேந்திரா, என். கிருஷ்ணராசா, கே. இரத்தின சிங்கம், திருமதி அருச்சுன எஸ். இராமச்சந்திரன், வி அருமைநாயகம், எம். ராஜகுலேந்திரன், வி. யோகசிகாமணி, அ.சிறிகரன் ஆகியோர் ஆஜராஞர்கள்.

பொலிஸ்தரப்பில் ஏ. எஸ். பி. திரு. நிமால் சில்வா, கல்கிசை இன்ஸ்பெக்டர் திரு சில்வா, பருத்தித்துறை இன்ஸ்பெக்டர் ஜெயசேகரா ஆஜராஞர்கள்.

வழக்கு இம்மாதம் 7ம் திகதி வரைபின்போடப்பட்டுள்ளது. (க-அ)

## சித்த ஆயுர்வேதத்துறை வளர்க

எம்மிடம்எல்லாவித

- ஆயுள்வேத மருந்து வகைகள்
- விவசாய ரசாயனப் பொருட்கள்
- சகல சாப்புச் சாமான்கள்

மற்றும்

ஆடம்பரப்பொருட்கள் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## லீலாவதிஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: க. தம்பிப்பிள்ளை

கண்டிவீதி, கைதடி.



## சித்த ஆயுர்வேத வைத்தியத்துறை ஓங்குக

## மணியம்ஸ்

16, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

- கூறைச்சேலைகள்
- ஆண், பெண் அனைவருக்கும் ஏற்றவிதமான பெல்ஸ்,
- மினிஸ்கேட் - றெடிமேட் உடைகள்

மற்றும்

சகலவித புடவைவகைகளும் கிடைக்கும்.



## அபிஷேகத் திரவியங்கள்

### சந்தனக் குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)

- பழனி வாசனை விபூதி
- அபிஷேக குங்குமம்
- பஞ்சாமிர்த சாமான்கள்
- நைவேத்திய சாமான்கள்
- அஷ்டபந்தன மருந்து
- அத்திபாரமிடும் பொருட்கள்
- விவாக முகூர்த்த பொருட்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

- 'ராதா' பத்மினி ஜவ்வாது பத்தி
- 99-999 ஜவ்வாது பத்தி
- இந்திராணி பத்தி
- சக்தி, பூஜா, அகர் பத்திகள்
- மட்டிப்பால் பத்திகள் ஃ தாளம்பூ பத்திகள்
- விளைவு சூடம், சாம்பிராணி

மருந்துவகைகள்

ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின் தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்.

## எஸ். சுப்பிரமணியம்

அன் கொம்பனி,

(மருந்து, மருந்துச் சரக்குகள், கோவில் அபிஷேகத் திரவிய வியாபாரம்)

53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். போன்: 541. வீடு: 7068 | 160 செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 3582


# கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்

# யாழ்ப்பாணத்தில் சித்

இலங்கையில் புராதன காலத்தில் இராவண அரசன தமிழ் வைத்தியமான சித்த வைத்தியத்தைத் திறம்படப் பேணிவந்தான். அவன் காலத்தில் இலங்கை எங்கனும் சிறந்த மூலிகைகள் இருந்ததாகக் கூறுவர். அக்காலத்தில் மூலிகைகளைக்கொண்டே பெரும் வைத்தியங்களை செய்து வந்தனர். இவை இயற்கையாக உடம்பில நோய்களைத் தீர்க்கவல்லதாயிருந்தன. இலை, காய், பூ. தண்டு. வேர், முதலிய பொருட்களை சமூலம் என அழைப்பர் இச்சமூலங்களைக் கொண்டே அன்றும் இன்றும் வைத்தியம் செய்து வருகின்றனர் பரம்பரையாக வந்த வைத்தியர்கள்.

இற்றைக்கு 3000- 4000 வருடங்களுக்குமுன் சித்த வைத்தியம் இந்தியாவின் தென் பகுதியிலும், இலங்கையிலும் வளம்பெற்றிருந்தமையைப் பழைய கல்வெட்டுகள், புராதன பொருட்கள் மூலமாக அறிய முடிகின்றது. அன்றியும் சித்தவைத்தியமானது மணிமந்திர ஒளடதங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இதனாலோ என்னவோ சித்தவைத்தியர்கள் தாங்கள் மக்களுடன் தொடர்பு கொள்ளாமல் தனிமையாக வனங்களிலிருந்து அபூர்வ மருந்துகளைத் தயாரித்து மக்கள் பிணிதீர்த்து வந்தனர். அக்காலத்துத் தமிழ் மன்னர்கள் இவர்களை ஆதரித்து ஆதுரசாலைகள் அமைத்து மக்கள்பிணி தீர்த்தனர்.

வட இலங்கையில் சிறந்த பல சித்த வைத்தியர்கள் தென் இலங்கைக்குச் சென்று சிங்கள மன்னர்களுக்கு வைத்தியம் செய்ததாகவும், பிற்காலத்திலும் சிறந்த பரம்பரை வைத்தியர் ஒருவர்அக்காலத்து வெள்ளைக்கார அரசாங்க அதிபருக்கு வைத்தியம் செய்து குணப்படுத்தியதாகவும் அறிகிறோம்.

**-- டாக்டர் என். கந்தையா --**

**(வைத்திய அதிகாரி, யாழ். ஆயுள்வேத ஆஸ்பத்திரி)**

இலங்கையில்சுதேசவைத்திய முறை முப்பிரிவாக உள்ளது. ஆயுள்வேதம், சித்தம்,யூநானி என்பன அவை. ஆயுள்வேதம் சிறப்பாக சிங்களமக்களும், யூநானி வைத்தியம் முஸ்லிம் மக்களும் கைக்கொண்டுவருகின்றார்கள். இருந்தும் இம்முறைகளையும் பரபலாக எல்லா மக்களும் போற்றி வருவது கண்கூடாகும். சித்த வைத்தியம் தமிழ்மொழி மூலமும், ஆயுள்வேத வைத்தியம் சமஸ்கிருத மொழிமூலமும் யூநானி வைத்தியம் உருது மொழி மூலமும் இருக்கின்றன. எனவே இம்மொழி வல்லுநரே இவ்வைத்திய முறையை நன்கு கற்கலாம். யூநானி வைத்திய முறைபோத்துக்கீசர் காலத்துக்குச் சற்று முன்னதாக அரபு நாட்டிலிருந்து வந்த முஸ்லிப் மக்கள் மூலமாக அறிமுகப்படுத்தப் பட்டதாகும்.

ஆயுள்வேத வைத்திய முறையை பண்டைக்காலச் சிங்கள அரசர்கள் நன்கு போற்றி வளர்த்தனர். இவர்களில் புத்ததாச மன்னன் சிறந்தவன். இதை நாம் மகாவம்சமூலமாக அறியலாம் இதேமாதிரி சித்தவைத்தியத்தையும் தமி[ழ்]... போற்றி வளர்த்... சித்தவைத்தி...

இலங்கையில் ... விசேடமாக வட... குப் பகுதி சி... தைக் கையாண்... றார்கள். சி... தைச் சித்த... எனவும் கூறுவர்... வேதம் என்பது... பாற்றும் காவிய... கப்படும். இத்த... ளும் வாத, பி... ளையே அடிப்ப... கொண்டவை. ... லும், செய்ப... கொடுப்பதிலுமே...

### ...யுர்வேத ஆணையாளர் செய்தி

ஆயுர்வேத திணைக்களம்,
கொழும்பு.

யாழ்ப்பாணம் கைதடியில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி திறந்து வைக்கப்படும் சமயத்தில் செய்தியொன்றினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்

நீண்டகாலமாகவே யாழ்ப்பாணப்பகுதிக்கு ஆயுர்வேதஆஸ்பத்திரியொன்றின் தேவைநிறைவேற்றப்படாமல் இருந்துவந்துள்ளது. நிறைவான வசதிகளுடன் ஆயுர்வேத ஆஸ்பத்திரியொன்றை நிறுவுவதன் மூலம் இந்தத்தேவையை எம்மால் நிறைவேற்ற முடிந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆஸ்பத்திரியில் 150 படுக்கை வசதிகளுண்டு. 30 படுக்கைகள் கொண்ட 5 வார்ட்டுகள் உண்டு கட்டிட வேலைகளுக்கும் தளவாடங்களுக்குமாக 20லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. நவீனஆஸ்பத்திரியொன்றில் இருக்கவேண்டிய சகல வசதிகளும் இருக்கின்றன. இந்த ஆஸ்பத்திரியின் வசதிகளை வடபகுதி மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

பி. பீ. வெரகொட,
ஆயுர்வேத ஆணையாளர்.

30-9-78

### ஒரு பொ...

கடந்த பல ... முன் கட்டி... இவ்வைத்தியசா... திறந்து வைக்கப்... யிட்டு மிக ம... றேன். இதேவே... தியசாலையின் ... பிரிவு சிறப்பு... வாழ்த்துகிறேன்... வடஇலங்கை சி... களும் பெரும் ப... லாம்.

வடபகுதியில் ... வேத வைத்திய... உடைமைய... மென்று பா... சித்தஆயுள்வே... ளுக்கும் இத... ளாகும்.

ப...

றெ. சு. இ...
டி. ஏ. எம்...
செயலாளா...
சுதேச ...
யா...

### 'சித்தவை... பொதும... பயன்... வேண்...

சித்த வைத்தி... குறிப்பாக வ... யர்களுக்கு - இ... யில் திறக்கப்... ஆயுள்வேத ... பெரும் பயன் ... அரசு வடபகு... அளித்திருக்கும்... வசதியையும் ... யாற்ற வந்தி... ஆயுர்வேதப்ப... சேவையையும் ... ளும் சித்தவ... பயன்படுத்துவே...

--டாக்டர் அ. ...


## சித்த ஆயுர்வேத வளர்ச்சிக்கு எமது ஆசிகள்!

### கைதடி மக்களின் நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்

| | |
|---|---|
| 0 சகல சாப்புச் சாமான்கள் | 0 நவநாகரீக பிடவைகள் |
| 0 பாடசாலைப் புத்தகங்கள் | 0 சகலவிதமான வாழ்த்து மடல்கள் |
| 0 எவர்சில்வர் பொருட்கள் | 0 பரிசுப் பொருட்கள் |

எம்மிடம் கிடைக்கும்

∵ திறம் நல்லெண்ணெய் ∵ றெடிமேட் ஆடைகள்
∵ தனி உழுந்துப் பப்படம் ∵ பாடசாலை உபகரணங்கள்

விநியோகஸ்தர்களும் தயாரிப்பாளர்களும்

## சிவம் இன்டஸ்ரி

கைதடிச் சந்தி :-: கைதடி



எ... பாரம்... வைத்தி... துல...

வைத்தி...

த. க. சி...
கோண்டா...
கோண்...



## சித்த ஆயுர்வேத வைத்தியத்துறை வளர்ச்சிக்கு எமது ஆதரவு!

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்கள்

விவசாய ரசாயனப் பொருட்களும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## கைதடி கிறைன்டிங் மில்

கண்டி வீதி — கைதடி.

# ...த்திரி திறப்புவிழா சிறப்புமலர்

# ...த்த ஆயுள்வேத வைத்தியசாலை

...மிழ் மன்னர்கள்
...ர்த்தனர்.

...தியம்
...ல் தமிழ் மக்கள்
...வடக்கு, கிழக்
...சித்தவைத்தியத்
...ண்டு வருகின்
...சித்தவைத்தியத்
...த்த ஆயுள்வேதம்
...வர். ஆயுள்
...து ஆயுளை காப்
...யம்என அழைக்
...த இருவேதங்க
...பித்த, கபங்க
...படையாக க
... மருந்துகளி
...பாகங்களிலும்,
...மே சில வித்தி

யாசங்கள உண்டு. அன்றி யும் சித்தவைத்திய முறையில் மிக அபூர்வமான தாதுவர்க்க பஸ்ம, செந்துரங்கள், மணி, கட்டு முதலியன உண்டு. இவைதற்கால நவீன மருந்துகளோடு ஒப்பிடக் கூடியவை.

**குப்தா கமிஷன் சிபார்சு**

இலங்கை அரசு இற்றைக்குப் பதினெரு வருடங்களுக்கு முன் அன்றைய சுகாதார அமைச்சர் திரு.எம்.டி. ஏச். ஜெயவர்த்தனுவினுல் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது இதற்குக் காரணஸ்தார்கள் வடபகுதிச் சித்தவைத்திய சங்கங்கங்களும், சித்த வைத்தியத்தில் அக்கறைகொண்ட பெரியோர்களுமாவர். இவர்கள் பன்முறை அரசாங்கத்தை வற்புறுத்தியதின் காரணமாக அரசர்ங்கம் சித்த ஆயுள்வேத யூநானி வைத்தியம் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிப்பதற்காக முப்பதுவருடங்களுக்கு முன்பதாக குப்தா கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷனின் அறிக்கையின்படி சித்த கல்லூரியும் வைத்தியசாலையும் யாழ்ப்பாணத்தில் அமையவேண்டுமென சிபார்சு செய்தது. அதற்கமையவே சித்த கல்லூரிக்கும் வைத்தியசாலைக்கும் கைதடியிலுள்ள 14 ஏக்கர் நிலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக வெளிநோயாளர் பகுதியாக இயங்கிவந்த இவ்வைத்தியசாலை இலங்கையின் இரண்டாவது பெரிய ஆயுர்வேத வைத்தியசாலையாக மாறியுள்ளது. சித்த கல்லூரி கட்டிமுடிக்கப்பட்டு தற்போது தற்காலிகமாக இலங்கைப்பல்கலைக்கழக யாழ்.வளாகத்துக்கு மருத்துவ பீடம் நடத்துவதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல வைத்திய சங்கங்களின் வேண்டுதலின் பேரிலும், ஆயுர்வேத ஆணையாளர் திரு.பீ.பி. வெரகொடவின் அயராமுயற்சியின் காரணமாகவும் இவ்வைத்தியசாலை உள்நோயாளர்பகுதி கடந்தமாதம் 12ம் திகதிசுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவினுல் திறக்கப்பட இருந்து பின்னர் பின்போடப்பட்டது.

இவ்வைத்தியசாலையில் 150

(8-ம் பக்கம் பார்க்)

...ான்னுள்
...ஆண்டுகளுக்கு
...முடிக்கப்பட்ட
...சாலை இன்று
...கப்படுவதனை
...மகிழ்ச்சியடைகி
...வேளை இவ்வைத்
...உள்நோயாளர்
...டன் இயங்க
... இதனுல்
...சித்தவைத்தியர்
...யன் அடைய

...ல் சித்த ஆயுர்
...யம் அரசினர்
...யாகவேண்டு
...பாடுபட்ட சகல
...வத வைத்தியர்க
...து ஒரு பொன்னு

... டாக்டர்
...இன்னுசித்தம்பி
...ம். எஸ். (இல.)
...ளர், வடஇலங்கை
...ச வைத்தியசாலை
...யாழ்ப்பாணம்.

# ஆயுள்வேத வைத்தியத்தில் நமக்கொரு விடிவெள்ளி

ஆயுள்வேத வைத்தியமா?...... அது கறுத்த வைத்தியம் - தமிழ் வைத்தியம் - சித்த வைத்தியம் என்று படிகள் பல இறக்கிக் கூறிக்கொண்டிருக்கும் நம் சமுதாயத்திற்கு இன்று காலை ௪ மணியுடன் பூரண பொலிவுடன் தொழிற்பட இருக்கும் கைதடி சித்த ஆயுளவேத வைத்தியசாலை ஒரு விடிவெள்ளியென்றே கூறவேண்டும். ஆயுள்வேத வைத்திய முறைப்படி நவீன சாதனங்களின் உதவிகொண்டு முற்றிலும் நவீனமயமாகக்கப்பட்ட ஒரு வைத்தியசாலை இது. ஒவ்வொரு பிரஜையும் சென்று பார்ப்பதன்மூலமும், சிகிச்சை பெறுவதன்மூலமுமே தற்காலத்தில் ஆயுள்வேத வைத்தியம் எந்த நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நம்மக்கள் அறிய முடியும்.

இவ்வைத்தியசாலைமுழுக்கமுழுக்க ஆங்கில வைத்தியசாலையைப் போன்று தகுதியான வைத்தியர்களாலும், தகுதியான தாதிமார்களாலும், தகைமையுள்ள மருந்தாளர்களாலும், பரிசாரகர்களாலும், ஆய்வுகூட உத்தியோகத்தர்களாலும் பரிபாலிக்கப்படும்.

இந்த வைத்தியசாலையில் அடுதத நட்வடிக்கையாகபிரசவவிடுதி, இன்னேரன்ன நிபுணத்துவ சிகிச்சைப் பிரிவுகளையும் ஆரம்பித்து ஒரு முழுமையான சித்த வைத்தியசாலையாகத் திகழச்செய்யப் பொதுமக்களும் செல்வந்தர்களும் அரசியலாளர்களும் வைத்தியர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவார்களென எதிர்பார்ப்போம்.

இந்த ஆஸ்பத்திரியின் கட்டிட எழிலையும் அங்குள்ள நவீன சாதனங்களையும் நவீன முறையில் தயார்செய்த மருந்து வகைகளையும் எந்திரமயமாக்கப்பட்ட மருந்தகத்தையும் (பார்மசி) ஆய்வுகூடக் கருவிகளையும் பார்வையிடும் நம் மக்களும் பாரம்பரிய வைத்தியர்களும், இந்த அள

(8-ம் பக்கம் பார்க்க)

**-- டாக்டர் க. மருதயினர் --**
(செயலாளர், அ இ சித்த டி ஏ எம் எஸ் பட்டதாரிகள் சங்கம்)

முழுமை வாய்ந்த ஆய்வுகூட வசதி. அம்புலன்ஸ்வசதி ஆகியவற்றையும் ஏற்படுத்தக் கூடியதாய் கட்டிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன

தொடர்ந்து வெளிநோயாளர் பகுதியில் பாம்புக்கடி முறிவு, நெறிவு, கண் வியாதி, காது மூக்கு, தொண்டை வியாதிகள், விரணம் ஆகிய

...வத்தியரும்
...மக்களும்
...படுத்த
...ண்டும்'
...தியத்துறைக் கு
...வடபகுதிவைத்தி
...இன்று கைதடி
...படும் யாழ்.
... ஆஸ்பத்திரி
... அளிப்பதாகும்.
...தி மக்களுக்கு
...ம் இம்மாபெரும்
... இங்கு பணி
...ிருக்கும் சித்த
...ட்டதாரிகளின்
... பொதுமக்க
... வைத்தியர்களும்
...வோமாக.
... கெங்காதரன்

...மது
...ம்பரிய
...யத்துறை
...ங்குக
...யகலாநிதி
...வஞானம்
...ாவில் மேற்கு,
...டாவில்.

வடபகுதிமக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

கைதடியில் இன்று திறக்கப்படும் நவீனவசதிகளுடன் கூடிய ஆயுர்வேத ஆஸ்பத்திரி வடபகுதிமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அரிய வாய்ப்பை நாம் மதித்துப் பயன்படுத்துவோமாக.

சுந்தரம்பிறதர்ஸ்

சகலவித ஆயுர்வேத மருந்துச் சரக்குகள்,
கோவில் அபிஷேக திரவியங்கள் விற்பனையாளர்கள்.

175, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

சித்த ஆயுர்வேத வைத்தியத்துறை வளர்ச்சிக்கு எமது ஆதரவு!
சகலவித மருந்துவகைகளுக்கும்
எம்மை நாடுங்கள்
சென்றல் பார்மஸி
(உரிமையாளர்: எஸ். மதியாபரணம்)
77, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்

நவநவமான டிசைன்களில்
விதவிதமான புடவைவகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்!
கணேசானந்தா
சில்க் பலெஸ்
நவின சந்தை, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

சித்த ஆயுர்வேத வைத்தியத்துறை
வளம்பெறுக
எம்மிடம் சகல
மருந்துச்சாமான்களையும்
மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
க.செ.கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உங்களுக்கு வேண்டுமா?
FLEX - A - LITE LiGHT DIMMER
மின்னெளியைக் கூட்டவும் குறைக்கவும்
ஏற்ற நவீன சாதனம்
விஜயம் செய்யுங்கள்-
சி.சின்னத்துரைஅன்பிறதர்
யாழ்ப்பாணம். போன்: 284
மொண்டியா சிற்றிசன்
கைக்கடிகாரங்கள் பெருமளவில் எம்மிடம் உண்டு.

ஆடம்பரப் பொருட்களுக்கும்
சிறந்த பாதணிகளுக்கும்
யாழ்.நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
நாதன்ஸ்
நவினசந்தை, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

கைதடியில் தரம்மிக்க
ஒரே சைவ ஹோட்டல்
ஆரியபவான்
∴ சுவை ∴ சுத்தம் ∴ உபசரணை
பலகார பட்சண வகைகளுக்கு
ஓடர்கள் ஏற்கப்படும்.
கண்டி வீதி — கைதடி.

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி
வடபகுதியின் வரப்பிரசாதம்
சகல மருந்து வகைகளுக்கும்
நாடுங்கள்
புவனேஸ்வரி
மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
69, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

# கேந்திர ஆயுதக் கட்டுப்பாடு: ரஷ்யா, அமெரிக்கா இணக்கம்

வாஷிங்டன், அக். 1

கேந்திர ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் சுமுகமாகத் தீர்ந்துவிட்டன.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டரும், சோவியத்யூனியன்வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதனையடுத்து இது தொடர்பான உடன்படிக்கை சாத்தியமாகியுள்ளது.

இருதலைவர்களும் வாஷிங்டனில் 4 மணி நேரம் சந்தித்துப் பேசினர்.

திரு. குரோமிக்கோ இதற்கு முன்னர் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்சையும் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இளைஞர் நையப் புடைக்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வளாகத்துக் கருகில் நேற்றுமுன்தினம் பரமேஸ்வராச் சந்திக்கருகிலுள்ள பஸ்தரிப்புநிலையத்தில் ஓர்இளைஞர் வேறுசிலஇளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டாராம்.

சம்பந்தப்பட்ட இளைஞர் வேறொரு இளைஞரை சேஷ்டை செய்து துன்புறுத்திக்கொண்டிருந்தபோது அங்குவந்த வேறு சில இளைஞர்கள் அவரது நடத்தையைக் கண்டிக்கும் விதத்தில் இவ்வாறு அவரைத் தாக்கியதாகத் தெரிகிறது.

தாக்கப்பட்ட இளைஞர் வாலிபர்களிடம் தமது தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரியதாகவும் தெரிகிறது.

யாழ். வளாகத்தில் புதிய மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களால் 'ஸ்ரகிங்' செய்யப் படுவதாகக் கூறப்படுவதற்கும் மேற்படி சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

## புதிய குரவர்கள்

[அரியாலை]

யாழ்ப்பாணத் திருமண்டலத்தின் உதவிக் குருக்களாக நெடுந்தீவைச் சேர்ந்த திரு. வி. என். தர்மகுலசிங்கமும், வரணிகுடத்தனையைச் சேர்ந்த திரு. எஸ். ஜெயகேசனும், அராலியைச் சேர்ந்த திரு ஏ. ஜெயக்குமாரும்ஆகியோர் வட்டுக்கோட்டைக் கதிட்ரல் ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் திருநெறிப்படுத்தப்பட்டனர் இவர்கள்.

பேராயர் அருட்பெருந்திரு டி. யே. அம்பலவாணரினால் திருநெறிப்படுத்தப் பட்டனர். அருள் திரு. எஸ். எஸ். அருளம்பலம் அடிகள் அருளுரை வழங்கினார். [அ]

### லண்டன் ஊடாக

# றொடீஷியத் தலைவர்கள் செல்ல பிரிட்டன் தடை

வாஷிங்டன், அக். 1

லண்டன் ஊடாக றொடீஷியாவின் தற்காலிக அரசுத் தலைவர்கள் அமெரிக்கா செல்வதற்கு பிரிட்டன் தடைவிதித்துள்ளது.

றொடீஷியத் தற்காலிக அரசின் தலைவர்கள் அமெரிக்க செனட் சபை உறுப்பினர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்துவது என்ற தம்முடிவை வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் அமெரிக்காவுக்கு லண்டன் ஊடாக இத்தலைவர்கள் செல்லக்கூடாது என்று பிரிட்டன் தடை விதித்துள்ளது.

வேறுவழியாக அமெரிக்கா செல்வது பற்றி இவர்கள் தற்போது ஆலோசித்து வருகிறார்கள். (உ)

### மே. பின்லாந்தில்

## திசைதிருப்பப்பட்ட விமானம் ஹெல்சிங்கியில் தரித்தது

லண்டன், அக். 1

மேற்குப் பின்லர்ந்தில் இருந்து 12 பிராயாணிகளை பணயமாக வைத்து நபர் ஒருவரால்திசைதிருப்பப்பட்ட விமானம் ஹெல்சிங்கி விமான நிலையத்தில் தரித்துள்ளதாக அறிக்கைகள்தெரிவிக்கின்றன.

1 லட்சத்து 75,000 டாலர்கள் தனக்கு அளித்தாலே பணயக்கைதிகளை விடுவிக்க முடியும் என்று பிரஸ்தாப நபர் நிபந்தனை விதித்திருந்தார்.

ஆஸ்பத்திரி ஒன்றிற்கு இப்பணம் கொடுக்கப்படவுள்ளதாக இவர் தெரிவித்திருந்தார்.

இவரது மனைவியிடம் குறிப்பிட்ட பணம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதுபற்றி பிரஸ்தாப நபரிடம் தொலைபேசியில் தொடர்புகொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

## ச. ச. சமாஜ நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜ நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திருமதி வேதவல்லிகந்தையா, உபதலைவர்கள் திருவாளர்கள் எம். திருநாவுக்கரசு, எஸ். வி. மகேந்திரன், செயலாளர் திரு. சி. கதிர்காமத்தம்பி, உதவிச்செயலாளர் திரு ஏ. கந்தசாமி,பொருளாளர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை.

திருவாளர்கள் எஸ். பஞ்சலிங்கம், கே ஜெயபாலசிங்கம் என். பாலகிருஷ்ணன், எம். பொன்னுத்துரை, எம். கே. இளையப்பு, எஸ். வி. சுப்பிரமணியம் ஆகிய ஆறுபேரைக் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. (ஊ)

### லெபனான் யுத்தம்:

## கார்ட்டர் யோசனைக்கு சிரியா எதிர்ப்பு

பெய்ரூட், அக். 1

லெபனான் விவகாரம் தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டரின் கோரிக்கையை சிரியா நிராகரித்துள்ளது.

அமெரிக்கா லெபனானில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது என்று சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது இவ்வாறு இருக்க, லெபனானில் 1975ம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் உக்கிரநிலையைஅடைந்துள்ளதாகவும் நேற்று மட்டும் 220 பேர் வரை பலியாகியிருக்கலாம் என்றும் பெய்ரூட் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

## பிரசாரங்களை துரிதப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தொகுதியில் மக்கள் விடுதலை முன்னணியை வலுப்படுத்துவது தொடர்பாக முன்னணியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. ஜி. எஸ்.பொன்சேகா,ஏழாலையைச் சேர்ந்த திரு. இரத்தினம் லஷ்மிகாந்தனின் அனுசரணையுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்த வகையில் அவர் முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. உபதிலகமநாயகா முதலான தலைவர்களுடன் தொடர்புகொண்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தின் ஏனைய தொகுதிகளிலும் பரவலாக முன்னணியின் பிர்சாரங்களை சாதாரண மக்கள் மத்தியிலும் கிராமிய ரீதியாக நடத்தவும் திரு. பொன்சேகா தொடர்ந்து முற்பட்டுள்ளார். (உ)

### வெள்ள அபாயம்

## கல்கத்தாவில் குறைகிறது; மே. வங்கத்தில் கூடுகிறது

புதுடில்லி, அக். 1

கல்கத்தாவில் வெள்ள அபாயம் குறைந்து வருகின்ற போதிலும் மேற்கு வங்காள மாநிலத்தின் பல மாவட்டங்களில் வெள்ள அபாயம் அதிகரித்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் 147 பேர் வெள்ளத்தில் மாண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் மீட்பு வேலைகளில் அல்லும் பகலும் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

# காந்தி ஜெயந்தி: தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, அக். 1

காந்தி ஜெயந்தியை அவர் பிறந்த தினமான அக்டோபர் 2-ம் திகதி முதல் ஒரு வாரத்திற்குக் கொண்டாட தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

2 ம் திகதி ஆரம்பமாகும் காந்திஜெயந்தி விழாவை ஆச்சார்ய கிருபளானி ஆரம்பித்துவைப்பார்.

இத் தினத்தை ஹரிஜனர்கள் தினமாகக் அனுஷ்டிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

ஹரிஜனர் தினமான அன்று ஒவ்வொரு ஜாதி ஹிந்துக்களும் தமது வீட்டில் ஒரு ஹரிஜனர் குடுப்பத்திற்கு பகல் உணவோ அன்றி இரவுணவோ கொடுத்து அவர்களுடன் சேர்ந்து உண்ணுமாறு தமிழ்நாடு கவர்னர் திரு. பிரபுதாஸ்பட்வாரி கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 16-ந் திகதி

திங்கட்கிழமை

(2-10-78)

**மேடம்:-** எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கிடமுண்டு. கூட்டு வியாபாரத்தில்மோசடி நடக்கலாம், சிந்தித்தபின் செயலாற்றுக.

**இடபம்:-** வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும், ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாகஇருக்கும், சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும்,பொன்னான தினம்.

**மிதுனம்:-** கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும், புதியகண்டுபிடிப்புக்களில் ஊக்கம் ஏற்படும், டாக்டர்கள் போற்றப்படுவர், தூரத்துச்செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும். நல்ல நாள்.

**கடகம்:-** பணம் பலவழிகளாலும் செலவாகும், அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும், உமது நடவடிக்கைகளை வேவுபார்ப்பர், பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும், நிதானம் நன்று.

**சிங்கம்:-** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மைஉருவர்கும், சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும், விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கிடமுண்டு, மனத்திடம் வேண்டும்.

**கன்னி:-** வெளியிடத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும், தொழில் சம்பந்தமான கவலைகள் அதிகரிக்கலாம், திடீர்பிரயாணத்திற்கும் இடமுண்டு, உடல்நலம்பாதிக்கப்படக்கூடும், சுகாதாரம் வேண்டும்.

**துலாம்:-** அதிர்ஷ்டகரமான தினம், சிலர் வாழ்க்கையில் திரவிய லாபத்திற்குமிடமுண்டு, மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும், வீட்டில் சுபகாரியம் ஒன்றும் இடம் பெறலாம், பணம்பத்தும்செய்யும்.

**விருச்சிகம்:-** அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும், உம்மிடம் உதவி பெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள், விழிப்புடன் இருக்கவும்.

(7-ம் பக்க பார்க்க)

### 29-வது தேசிய தினவிழா:

# பரஸ்பர நட்புறவு தழைக்க சீனவுக்கு ரஷ்யா வாழ்த்து

மாஸ்கோ, அக். 1

தனது 29-வது தேசிய தினத்தைக் கொண்டாடும் மக்கள் சீனக் குடியரசுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியில்''சீன—சோவியத்நட்புறவு வலுப்படவேண்டும்'' என்ற தனது விருப்பத்தை சோவியத் யூனியன் வெளியிட்டுள்ளது.

சமாதான சகவாழ்வுக்கு இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்ற தனது வேண்டுகோளை இவ் வாழ்த்துச் செய்தியில் சோவியத் யூனியன் மீண்டும் நினைவூட்டியுள்ளது.

இதேவேளை,எதிர்காலத்தை சீனமக்கள் நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறார்கள் என்று பீக்கிங் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பீப்பிள்ஸ் டெய்லி இதனையொட்டி வெளியிட்டுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் தேசிய முற்போக்கில் ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

தீவிரவாத குழப்பக்காரர்களை ஒழிப்பதற்கு இப்புரட்சி உதவும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## ''ம. வி. முன்னணி ஆட்சிக்கு வந்தால்

# தமிழர் வாழ்வுபற்றித் தமிழரே தீர்மானிப்பர்''

-- செயலாளர்

(பண்டத்தரிப்பு)

''இந்நாட்டில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதா அல்லது பிரிந்துபோவதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை நாம் ஆட்சிபீடம் ஏறும் பட்சத்தில் அவர்களிடமே விட்டுவிடுவோம்.''

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. உபதிஸகமநாயகா அளவெட்டி வடக்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு முன்னதாக மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று இன்றைய பிரதமர் புத்தரின் பொன்மொழி ஒன்றைக் கூறி அன்று பிரசாரம் செய்தார். ஆனால் இன்று சாப்பிட்டுக் கொண்டிருந்தால் சரிவராது நாட்டை அபிவிருத்தி செய்யத் தியாகம் செய்ய வேண்டும் என்று பிரதமரும் ஜனாதிபதியும் கூறிவருகின்றார்கள்.

### புதிய அரசமைப்பில் தமிழுரிமை

'புதிய அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேசட்டத்தில் தமிழ் மொழி தேசிய மொழிகளில் ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் சிங்களம் மட்டும். மறுபக்கத்தில் தமிழ் தேசிய மொழியாக இருப்பது எப்படி? ஜே. ஆரின் நோக்கம் தமிழ் மக்களை ஏமாற்றுவதே. இந்த விதமான அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் அடங்கியிருப்பதாக திரு. ஏ. அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. முக்கிய மசோதாக்கள் பொது ஜன வாக்கெடுப்பிற்கு விட்டு மக்கள் தீர்ப்பை அறிவதற்கு அரசியல் சாசனத்தில் உரிமையளிக்கப்பட்டுள்ளது.

### ஆட்சிக்கு வந்தால்...

''எங்கள் முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் நாங்கள் புதிய அரசியல் சாசனம் உருவாக்குவோம். அதையிட்டு மக்கள் கருத்தை அறிவதற்காக பொதுசனவாக்கெடுப்பிற்குவிடுவோம் என்பதையும் இங்கு தெரிவிக்க விரும்புகின்றோம். தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். இதை எங்கள் முன்னணியின் கொள்கைப்பிரகடனத்தில் தெளிவாக தெரிவித்திருக்கின்றோம். ஒன்று சேர்ந்து இந்நாட்டில் ஐக்கியமாக வாழ்வதா? அல்லது பிரிந்து போவதா? என்று தீர்மானிக்கும் உரிமையை தமிழ் மக்களுக்கு நாங்கள் வழங்குவோம் என்பதை நாங்கள் தெளிவாகவும், உறுதியாகவும் இங்கு கூறிவைக்கின்றோம்.

முன்னணியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. ஜி. எஸ். பொன்சேகா தமிழில் உரையாற்றினர். மகளிர் பிரிவுத் தலைவி திருமதி கருணவும் பேசினர். [அ-உ]

### இராசிபலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:-** பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம், வெளியிடத் தொடர்புகள் பெருகும், கருத்து வேற்றுமைகள் மறையும்.

**மகரம்:-** உள்ளம் உவகையால் துள்ளும், உறவு முறைகளில் இறுக்கமேற்படும், பெரியார் ஒருவரின் சந்திப்பு உங்களுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும், அறவழியில் நாட்டமுண்டு.

**கும்பம்:-** பகைமூட்டத்தின் மத்தியில்வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள், சிறிய விடயத்திற்குக் கூட குறை கேட்கநேரிடும், கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும், துயர்படிந்தநாள்.

**மீனம்:-** மகிழ்ச்சிகரமான நாள். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர், கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும், களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை



எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவன மாணவரினல் மேடையேற்றப்படும். ''அணைந்த தீபம்'' இலவச நாடகத்தில் த. பஞ்சலிங்கம். இ. பாஸ்கரன் தோற்றும் ஒரு காட்சி.

## ''நற்பிரஜை உருவாவதில் சாரணியத்தின் பங்கு''

### சுன்னகத்தில் வி. பி. உரை

(யாழ்ப்பாணம்)

''நல்ல பிரஜைகளை உருவாக்குவதில் சாரணியம் முக்கிய பங்கை வகிக்கிறது. இத்துறையில் இக்கல்லூரியினர் காட்டிவரும் ஆர்வம் மெச்சுதற்குரியது. செல்வன் ஸ்ரீ குகன் பாடசாலைக்குமாத்திரமல்ல, தமிழ் வாலிபர் அனைவருக்குமே முன்மாதிரியாக, பெருமையைத் தேடித் தந்துள்ளார்.''

இவ்வாறு சுன்னகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலிருந்து ஜப்பானில் நடைபெற்ற 7 வது நிப்பன் 'ஜம்போறி'யில் கலந்துகொண்டு திரும்பிய சாரணர் செல்வன் சத்தியபாலன்- ஸ்ரீகுகனுக்கு கல்லூரியில் அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பழைய மாணவர்கள் சார்பில் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில் கூறினர்.

கல்லூரியின் சார்பில் ஆசிரியர் திரு. இ. சிவானந்தன் பேசுகையில், சிலர் சாரணராக் கட்படுகிருர்கள். சிலர் சாரணராகவே பிறக்கிருர்கள் சாரணிய மாணவர்களுக்குக் காணப்பட வேண்டிய சகல சிறப்பும் ஸ்ரீகுகனிடம் காணப்பட்டமை அவர் இச்சிறப்பினை அடைதற்கு காரணமாயிருந்தன என்ருர்.

பெற்ருேர் சார்பில் ஆசிரியர் திரு. ம. முத்துத்தம்பி சாரணர் சார்பில் கல்லூரிச் சாரணர் ஆசிரியர் திரு. கே. எம். மாணிக்கமும் சாரணச் சகோதரர் சார்பில் செல்வன் ப. சிவலிங்கமும் கல்லூரி அதிபர் திரு. சி. தியாகராசாவும் உரைநிகழ்த்தினர்.

செல்வன் ச. ஸ்ரீகுகன் பதிலுரை நிகழ்த்துகையில் ''ஜப்பான் பிரயாணம் நான் பெற்ற வெற்றி அல்ல. அதற்குக் காரணமாயிருந்த கல்லூரி ஆசிரியர்களும் சாரணஆசிரியர்களும் பெற்ற வெற்றியாகும். ஜப்பான் மக்களுடைய சுறுசுறுப்பும் உற்சாகமும் ஓய்வில்லாத உழைப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்ததொன்ருகும்'' என்ருர்.

### வடக்கில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலத்தடி ஆகிய இடங்களிலும் சுயஉதவி வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

#### கிளிநொச்சித் தொகுதியில்

கிளிநொச்சித் தொகுதியில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக 100 வீடுகளும் கீழ் மத்திய வகுப்புத்திட்டத்தின்கீழ் 50 வீடுகளும் கட்டப்பட உள்ளன.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் கெட்டில் பகுதியில் 32 வீடுகள் கட்டப்படவுள்ளன.

தொகுதிக்கு 5 வீடுகளாக வட்டபகுதியில் கட்டப்பட்டு வரும் வீடுகள் அனைத்தும் மிகவிரைவில் வழங்கப்பட உள்ளன. சில தொகுதிகளில் இவ் வீடமைப்பு வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கே இவ் வீடுகள் வழங்கப்படும

[கூ-அ]

### முதியோர் கல்வி இயக்கம்

புதுடில்லி, அக். 1

முதியோர் கல்வி இயக்கம் நாளை தொடக்கம் செயற்படவிருக்கிறது. (உ)


Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
BOMB AT 10.10
(warfilm)

நாகம்மஸ் (சுன்னகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
ஜெமினி-பத்மினி
மீண்டசொர்கம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன் ஜெயலலிதா-சோ நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30 p. m
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adu ts only)

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 139-வது தினமாக
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தங்கத்திலே வைரம்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி நடித்த
கொஞ்சும் சலங்கை
(ஈஸ்ட்மன்கலர்) [புத்தம்புதிய பிரதி]
3-ந் திகதி முதல்
பட்டி விக்கிரமாதித்தன்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஃ ஜெமினி ஃ சரோஜாதேவி நடித்த
தாமரை நெஞ்சம்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நாகேஷ்...ராஜ்ஸ்ரீ... முத்துராமன் (இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு புதிய பிரதியாக புதுப் பொலிவுடன் புரட்சி நடிகரின் அரச கட்டளை

5-10-78 வரை மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா (புத்தம் புதிய பிரதி)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கண்ணன் வருவான்

### சாவகச்சேரியில் கலப்படம்:

# சாராயத்தில் தண்ணீர்! ரூபா 4, 600 அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள வெளிநாட்டுக் குடிவகை நிலையமொன்றில் சாராயத்தில் தண்ணீர் கலந்து விற்பனை செய்ததாகக் கண்டுபிடிக்தப்பட்டு விற்பனையாளருக்கு 4,600 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாராயத்தில் தண்ணீர் கலந்து விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து அந்நிலையத்தை சாவகச்சேரி கலால் பரிசோதகர் திரு. மகேந்திரன் சார்ஜண்ட் ரி. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் திடீர்பரிசோதனை செய்தனர்,

22 கறுப்பு வெள்ளை சாராயம் நிரப்பப்பட்ட போத்தல்களை சீல்வைத்து பரிசோதனைக்கு அனுப்பியதில் தண்ணீர் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மதுவரி கமிஷனர் விசாரணை செய்து குடிவகை, விற்பனையாளருக்கு 4,600 ரூபா அபராதம் விதித்தார். (க)

## ஆயுள்வேத...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

வுக்கு ஆயுள்வேத வைத்தியத்தை அரசு நவீனப்படுத்தி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது என்பதைக் கண்ணுரக் காணக்கூடியதாயிருக்கும். உருவாக்கப்படும் எம் பட்டதாரிகள் எத்தனை அறிவைப் பெற்று மேல்நாட்டு வைத்தியங்களைப் போன்று ஆறு வருடப் படிப்பின் பின் வெளியேறி இவ்வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார்கள் என்பதையும் உணரக்கூடியதாயிருக்கும்.

ஆயுள்வேதமென்றால்கறுத்த வைத்தியமில்லை; அதுவும் மேனாட்டு முறைகளுக்கு ஈடாக வளர்ந்துள்ள ஒரு தேசியமருத்துவ முறையென்பதை ஆண்டாண்டு காலமாக எடுத்தியம்பப்போகும் இவ்வைத்தியசாலையைப் பேணிப்பாதுகாத்து அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

எமதுசங்கத்தைப்பொறுத்த அளவில் இந்த வைத்தியசாலையை முற்றுமுழுதாகச் சித்த வைத்தியசாலையாகவே தொழிற்பட விரும்புகிறோம். இவ்விடயத்தை ஆயுள்வேத ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது அவர் அதற்கு இணக்கம்தெரிவித்து படிப்படியாக முற்றிலும்சித்த வைத்தியர்களைக் கொண்டதாயிருக்க ஆவனசெய்வதாகவாக்களித்துள்ளார். இவ் வைத்தியசாலை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டிருக்கவேண்டும். எக்காரணத்தாலோ சாத்தியப்படாமலிருந்த விஷயத்தை தற்போதைய ஆணையாளர் பீ. பி. வேரகொடவின் விடாமுயற்சியால் இன்றுகாலை 9 மணிக்கு திறந்துவைக்கப்படுகிறது. இப்பாரிய நடவடிக்கையைச் சிரமம் பாராது எம்பகுதி மக்களுக்குச்செய்துகொடுக்கும் அரசையும், ஆணையாளர் பீ. பி. வேரகொடயையும் மனமாரப் பாராட்டி எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு, வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் என்.கந்தையாவுடன் தோளோடு தோள் நின்று உதவவேண்டும்.

## வைத்திய அதிகாரி என். கந்தையா

கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியான டாக்டர் என்.கந்தையா கொழும்பு அரசினர் ஆயுள்வேதக் கல்லூரியில் டி. ஐ. எம். எஸ். பட்டம்பெற்று கொழும்பு அரசினர் ஆயுள்வேத ஆரோக்கியசாலையில் வெளிநோயாளர் பகுதி சித்த வைத்தியராகவும் உள்நோயாளர் பகுதிக்கு பிரதம சித்த வைத்தியராகவும் கடமையாற்றியவர். 1967 ஆண்டு உயர்பட்டப் படிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டு பண்டாரநாயக்கஞாபகார்த்த ஆராய்ச்சி நிலையத்தில் அதன் அதிபராக இருந்த டாக்டர் ஆர். ஆர். பட்டாக்,முன்னாள் சித்த விரிவுரையாளர்கள் டாக்டர் ஏ. கனகரெத்தினம், காலஞ்சென்ற டாக்டர் எஸ். எம். பொன்னையா, மற்றும் வைத்திய கலாநிதிகளிடம் உயர்கல்வி கற்று பின் வாதரோக நிதான சிகிச்சையில் ஆராய்ச்சிக்கட்டுரை எழுதி ஏச். பி. ஏ. என்ற உயர்பட்டம் பெற்றவர்.

ஆயுள்வேதபோமிலரி சபை, ஆயுள்வேத வைத்திய சபையின் வைத்தியர்களை பரீட்சிக்கும் பகுதி அங்கத்தவராகவும் இருந்து பணிபுரிந்த இவர் 1976ம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் யாழ். ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றார். (அ)

## யாழ்ப்பாணத்தில்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

படுக்கை வசதிகளைக்கொண்ட ஐந்து வார்ட்டுகளும், நவீன முறையில் அமைந்த சமையற்கூடமும், பல மருந்துகளைத் தயாரிக்கவசதியுள்ள மருந்துப்பாக கூடமும்அமைந்துள்ளது. இதில் சித்த ஆயுர்வேதமருந்துகள் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் கசாயம், தைலம், பத்து முதயனவும் தயாரிக்கவுள்ளோம்.

இங்கு கொழும்பு ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியில் படித்து பட்டம்பெற்ற வைத்தியர்களும், பட்டம்பெற்று பயிற்சி பெறும் வைத்தியர்களும் பணியாற்றுகின்றனர். அன்றியும் பயிற்சிபெற்ற ஆண், பெண் தாதிகளும், ஆண், பெண்கண்காணிப்பாளர்களும் கடமை புரிகின்றனர்.

இன்னும் சில மாதங்களில் விஷகடி, முறிவுதறிவு, கண்நோய் போன்ற விசேஷ வைத்தியப்பிரிவுகளையும் ஆரம்பிக்கவுள்ளோம். இவ்வைத்தியசாலை இன்று திங்கட்கிழமை காலை 9-00மணிக்கு ஆயுர்வேதஆணையாளர் திரு. பீ. பி. வெரகொடவினால் திறந்துவைக்கப்படுகிறது. இன்றுதினம் சித்த வைத்தியர்களுக்கும், அகற்சாகப் பாடுபட்டசகலபெரியோர்களுக்கும், தங்கள் எண்ணம் நிறைவுறும் பொன்னாளாகும். அன்றியும் இவ்வைத்தியசாலையை வடபகுதி மக்கள் சிறந்தமுறையில் பயன்படுத்துவார்களாக. (அ)

## அறிவித்தல்

### மலாய இலங்கையர் சங்கம் யாழ்ப்பாணம்

மேற்படி சங்கத்தின் 41வது வருடாந்தக் கூட்டம் சங்க மண்டபத்தில் 5-10-1978 வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும்.

அத்தருணம் கொழும்பில் வதியும் இலங்கையின் மலேசியத்தூதுவர் அவர்கள் தனது இரண்டாவது காரியதரிசியுடன் கூட்டத்திற்குச் சமூகமளிக்கவிருப்பதாக அறிவித்துள்ளார்.

ஆகவே சங்க அங்கத்தவர்கள் யாவரும், (பெண் அங்கத்தவர்கள் உட்பட) தவறாது பெருந்திரளாகச் சமுகம் தந்து தூதுவரைக் கௌரவிப்பதுடன் கூட்டத்தையும் சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன்வேண்டுகிறோம்.

கௌரவ காரியதரிசி

2-10-78 0471

## நவராத்திரி விழா

வயாவிளான் ஞானவைரவர் கோவிலில் இன்று தொடக்கம் 9 நாளும் நவராத்திரிவிழா கொண்டாடப்படவிருக்கிறது.

0 0 8

புளியங்கூடல் ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானத்திலும் நவராத்திரிவிழா கொண்டாடப்படுகிறது.

0 0 0

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலும் இன்று மாலை பூஜை ஆரம்பமாகிறது. நாளை நவராத்திரி கும்பஸ்தாபனம் நடைபெற்று பிரதி ஒன்பது இரவிலும் துர்க்கை அம்பிகை பூஜை வழிபாடு நடைபெறவுள்ளது.

0 0 0

யாழ்ப்பாணம் சைவ மகளிர் மன்றத்தின் ஆதரவில், டாக்டர் திருமதி தி. யோகநாதன் தலைமையில் கைதடி சைவ அநாதை இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை நவராத்திரிவிழா ஆரம்பமாகிறது. சிறப்பு சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகா கோவில் நவராத்திரி பூஜை இன்று ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 11ந் திகதி மானம்பு உற்சவம் நடைபெறும். (கெ)

## வீரமணி சென்னை திரும்பினர்

சென்னை, அக். 1

இலங்கை சென்றிருந்த தமிழ்நாடு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கடலூர் திரு கி வீரமணிநேற்றுசென்னை திரும்பினர்.

இலங்கையில், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டுவிழாக் கூட்டங்களில் தாம் கலந்துகொண்டதாகவும், அங்கு பெரும்வரவேற்புக் கிடைத்ததாகவும், பெரியாரின் சேவை இந்தியாவுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் தேவைப்படுகிறது என்றும் இங்கு நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. வீரமணி குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.

## இசை விருந்து ரத்து

[யாழ்ப்பாணம்]

இன்று மாலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமதி சத்தியபாமா ராஜலிங்கத்தின் மாணவ மாணவியரின் இசைவிருந்து தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது.

நவராத்திரிவிழாவையொட்டி இந்நிகழ்ச்சி வருடந்தோறும்நடைபெற்று வரு குறிப்பிடத்தக்கது. [உ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கு இன்று மாலை பத்தைமேனியில் நடைபெறும். தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மறறும் வாலிப முன்னணியினர் உரை நிகழ்த்துவார்கள்.

ஃ ஃ ஃ

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையின்புதிய வார்ட்டை ஆயுர் வேத ஆணையாளர் திரு. பி. வெரஹொட இன்று காலை திறந்து வைப்பார்.

0 0 0

இன்று மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காந்தியடிகளின் ஜயந்தி தினத்தை பேராசிரியர் திரு. கு, நேசையா தலைமையில் அகில இலங்கை காந்திசேவா சங்கமும், மறுமலர்ச்சி மன்றமும் கொண்டாடுகிறார்கள். [ஊ]

0 0 0

இளைப்பாறிய யாழ்ப்பாணம் நீதிபதி கே. வி. நவரத்தினத்திற்கு இன்று இரவு யாழ். சுபாஸ் ஹோட்டலில், யாழ். நீதிமன்ற சட்டத்தரணிகளால், இராப்போசன விருந்தொன்று அளிக்கப்படவிருக்கிறது. (க)

0 0 0

மிருசுவில் - உசன் இராமநாதன் மகா. வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்புவிழா இன்று மாலை வித்தியாலயத் திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது.

வடபகுதி வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகரும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

திருமதி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்குவார்.

(திரு-நிரு-உ)

0 0 0

தட்டாதெருகலாஜோதிகலை அரங்கில் இன்றுமாலை காந்தி பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. 'மில்க்வைற்' நிறுவன ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில், பொப்பிசைப் பாடகர், திரு. ரமேஷ் வைகுந்தநாதன், நாமக்கல் கவிராயரின் பாடல்களை பொப்பிசையாக பாடுவார்.

### பெருமாள் கோயில்

## இன்று கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் கொடியேற்றம் இன்று பகல் 12 மணிக்கு நடைபெறுகின்றது.

காலை 11-00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெறும்.

தினமும் இரவு 6 முதல் 7 மணிவரை கம்பராமாயண விரிவுரையை நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளது பிரதம சிஷ்யன் கானசுதாதாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்துவார். [கெ]

## காந்தி தினம்

[கொழும்பு]

மகாத்மா காந்திஜி அறங்காவல் குழுவின் ஆதரவில் இன்றுமாலை, லயனல்வென்ட் மண்டபத்தில் காந்திஜியின் 109-வது பிறந்ததினம் கொண்டாடப்படும். திரு. ரி. எஸ், பெர்னாண்டோ கியூ. ஸி, இவ்விழாவுக்கு தலைமை வகிப்பார். [ம]

## கிழைத்தேய...

[1-ம் பக்கதொடர்ச்சி]

மகாநாட்டில் சலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரை படிக்க, ஜப்பானிலுள்ள டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹரோஷிய விருப்பம் தெரிவித்துள்ள விபரமும் நேற்றைய குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் காந்தி விழா

[யாழ்ப்பாணம்]

இன்று வட இலங்கை பணபாட்டுக்கழகத்தினர் மகாத்மா காந்தி நினைவுக் கூட்டமொன்றை பருத்தித்துறை நகர சாந்திசிலைக்கு அருகாமையில் நடாத்துகின்றனர்.

யாழ். வளாக விரிவுரையாளர் திரு.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பேராசிரியர் கலாநிதி கா சிவத்தம்பி, திரு. எம்.சிறீபதி, டண்டிதர் திரு. ஏரம்பமூர்த்தி ஆகியோர் உரையாற்றுவர். [அ]

## கோதுமைக்குப் பதில் அரிசி மா

[கொழும்பு]

கோதுமை மாவுக்குப் பதிலாக அரிசி மா வழங்குவது பற்றி உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சு ஆராய்ந்து வருகிறது

## மரண அறிவித்தல்

### பொ. செல்வரெத்தினம் (கிளி)

கந்தர்மடம் பிரபல கார் சொந்தக்காரர் பொ. செல்வரெத்தினம் (கிளி) 1-10-78 காலையில் காலமானர். இவர் தவமணியின் கணவரும், பவளராணி நிரோஜினு ஆகியோரின் அருமை தந்தையாரும். திரு. சி. மகேஸ்வரலிங்கம் பொறியியலாளர் (ஆலோசகர் சபை நாவுலை) அவர்களின் அருமைமாமனுருமாவார். இவரின் ஈமக்கிரிகைகள் இன்று திங்கட்கிழமை (2-10-78) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

சி. மகேஸ்வரலிங்கம்

15, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். 0472